டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

Agridoctor.in | 2.03.2025 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 210 - Madurai | Online Edition

## தமிழகத்தில் இடியுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, மார்ச் 1

தமிழகத்தில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு வங்கக்கடலில் மாலத்தீவு வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, இன்று 2ம் தேதியில் தென்தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.



நாளை 3-3-2025ல் தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வடதமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

4ம் தேதி முதல் 7ம் தேதி வரையிலான நாட்களில் தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.




# இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, மார்ச் 1

28.02.25 அன்று திருச்சி மணிகண்டம் தொகுதியில் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவ மாணவர்களால் மாட்டைப் பாறைப்பட்டி அரசு நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு போட்டி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

பிலோமினா, தலைமை ஆசிரியர் தலைமையில் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைகழகத்தின் வேளாண் இறுதியாண்டு மாணவர்கள், இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர். அதில் மாணவர்கள் இயற்கை வேளாண்மையின் மதிப்பு, நெறிமுறைகள் மற்றும் நிலையான விவசாயம் குறித்து முக்கியமாக வலியுறுத்தினர். இறுதியாக பல்கலைக்கழக மாணவர்கள் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகளை நடத்தி அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகளை வழங்கினர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தனித்துவ அடையாள எண் பெற விவசாயிகள் பொது சேவை மையத்தில் இலவசமாக பதிவு செய்யலாம்

கிருஷ்ணகிரி, மார்ச் 1

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மின்னனு முறையில் அனைத்து விவசாயிகளின் தரவு சேகரிக்கப்பட்டு ஆதார் எண் போன்று விவசாயிகளுக்கு தனித்துவமான அடையாள எண் வழங்கப்பட உள்ளது. நில விவரங்களை இணைப்பதன் மூலம் அனைத்து துறை திட்டங்களையும் எளிதில் பெறலாம். இது குறித்து வேளாண்மை இணை இயக்குநர் சி.பச்சையப்பன், கூறியதாவது, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது 1,76,468 விவசாயிகள் பிரதமரின் கௌரவ நிதி திட்டத்தின்கீழ் பதிவு செய்து பயனடைந்து வருகின்றனர். விவசாயிகள் பதிவு (Farmer Regis-




tery) திட்டத்தின் மூலம் தரவுகளையும் சரிபார்த்து அவர்களுக்கு அடையாள எண் வழங்கப்படவுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் வேளாண்மை துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அலுவலர்கள், அட்மா திட்ட பணியாளர்கள், பயிர் அறுவடை பரிசோதகர்கள், சமுதாய பண்ணை மகளிர் மற்றும் வேளாண் கல்லூரி மாணவர்களால் இதுவரை 57,451 விவசாயிகளுக்கு அடையாள எண் வழங்கப்பட்டுள்ளது.

எனவே இதுவரை அடையாள எண் பெறாத விவசாயிகள் பொது சேவை மையத்தில் தங்களுடைய சிட்டா, ஆதார் நகல், ஆதார் எண் இணைக்கப்பட்ட செல்போனையும் கொண்டு வந்து இலவசமாக பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# பிரீடம் பவுண்டேசன் தொண்டு நிறுவனம் சார்பில் பாலாறு வேளாண்மை கல்லூரி மாணவிகளுக்கு சமூக விழிப்புணர்வு பயிற்சி




திருப்பத்தூர், மார்ச் 1

பாலாறு வேளாண்மைக் கல்லூரியில் பயிலும் வேளாண் பட்டப்படிப்பு இறுதியாண்டு மாணவிகள், தாவர நோயியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கு.விக்னேஷ் தலைமையில் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தை திருப்பத்தூரில் மேற்கொண்டு வருகின்றனர். அதில் ஒரு அங்கமாக பிரீடம் பவுண்டேசன் என்னும் தொண்டு நிறுவனம் சார்பில் மாணவிகளுக்கு சமூக விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில் பிரீடம் பவுண்டேசன் நிறுவனர் முனைவர் பு.இராமச்சந்திரன் தலைமை தாங்கினார். இந்த நிகழ்வின் முக்கிய நோக்கம் மாணவிகளுக்கு சமூகத்தில் நிலவும் பிரச்சனைகள், அவர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும். பயிற்சியில் மாணவிகளுக்கு பெண்கள் பாதுகாப்பு, லீகல் அவகாசம், சுய உறுதி, சுகாதாரம், சமூகப் பொறுப்புகள் போன்ற பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்து விளக்கப்பட்டன. பிரீடம் பவுண்டேசனின் சமூக நல வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சிறப்பு உரை நிகழ்த்தினர். மேலும், மாணவிகளுக்கு தன்னம்பிக்கை, சமூக நலத்தில் பங்கேற்பது, தொழில் முன்னேற்றம் ஆகிய துறைகளில் வழிகாட்டுதல் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் பல்வேறு கேள்வி-பதில்கள், குழு விவாதங்கள், செயல்பாடுகள் ஆகியவை இடம் பெற்று, மாணவிகள் இதில் ஆர்வமாக பங்கேற்றனர். மாணவிகள் இந்த பயிற்சியினால் பெரிதும் பயனடைந்ததாக தெரிவித்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 01.03.2025

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 20 | 26 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 18 | 22 | 57 | உருளை (பிற) | 18 | 22 |
| 1B | கத்திரி(Nadu) | 25 | 30 | 57A | உருளை(ஊட்டி) | 20 | 45 |
| 2 | வெண்டை | 30 | 36 | 58 | மேரக்காய் | 15 | 20 |
| 3 | தக்காளி (நாடு) | 12 | 15 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 20 | 26 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 12 | 16 | 60 | கேரட் | 50 | 60 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 30 | 36 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 45 | 52 |
| 6 | புடலை | 20 | 26 | 62 | நூல்கோல் | 20 | 26 |
| 7 | பீர்க்கன் | 25 | 30 | 63 | டர்னிப் | 30 | 38 |
| 8 | சுரைக்காய் | 10 | 14 | 64 | மு.கோஸ் | 14 | 18 |
| 9 | பாகற்காய் | 28 | 32 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 25 | 30 | 66 | காளிபிளவர் | 24 | 28 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 60 | 64 |
| 12 | அரசாணி | 12 | 16 | 68 | பூண்டு | 70 | 98 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 20 | 26 | 69 | இஞ்சி | 40 | 50 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 25 | 30 | 70 | புருக்கோலின் | 90 | 100 |
| 15 | சி.வெங்காயம் | 34 | 37 | 71 | பென்னி பீன்ஸ் | 50 | 54 |
| 16 | பெ.வெங்காயம் | 32 | 35 | 72 | குடமிளகாய் | 44 | 48 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 20 | 25 | 73 | ஊட்டி அவரை | 110 | 120 |
| 18 | பச்சை மொச்சை | 40 | 50 | | | | |
| 19 | முருங்கை | 70 | 74 | | | | |
| 20 | தேங்காய் | 60 | 64 | | | | |
| 21 | மாங்காய் | 60 | 70 | | | | |
| 22 | வாழைக்காய் | 38 | 42 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 48 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 58 | 62 | 75 | எலுமிச்சை | 55 | 65 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 35 | 40 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 70 | 76 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 24 | 28 | 80 | திராட்சை | 90 | 100 |
| 30 | புதினா | 5 | 6 | 81 | மாம்பழம் | 120 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 70 | 80 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயக்கீரை | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 30 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 70 | 74 |
| 40 | கோவக்காய் | 30 | 34 | 91 | பூவன் | 40 | 44 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 55 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 44 | 48 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 35 | 40 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 12 | 18 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 28 | 32 | 96 | நேந்திரன் | 60 | 65 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 16 | 20 | 97 | செவ்வாழை | 95 | 100 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 0 | 0 | 100 | கறிப்பலா | 40 | 45 |
| 50 | நிலக்கடலை | 0 | 0 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 25 | 30 | 102 | நெல்லிக்காய் | 70 | 75 |
| 52 | புளி | 130 | 140 | 103 | Seedless திராட்சை(ப/க) | 120 | 160 |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 27 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 20 | 24 | | | | |
| 55A | துவரை | 50 | 60 | | | | |

# நுண்ணூட்டச்சத்துக்கள் செறிவூட்டல் [Bio fortification]

● ஆரோக்கிய நலன்களுக்காகப் பயிர்களில் ஊட்டச்சத்து செறிவூட்டல் என்பது மிகவும் முக்கியமானது.

● வேளாண் பயிர்களில் ஊட்டச்சத்து செறிவூட்டல் என்பது பயிர்களின் ஊட்டச்சத்து பயன்பாடு, உறிஞ்சும் திறன் மற்றும் மண் வகைகளைப் பொறுத்து வேறுபடுகின்றன.

● நெல்லில் கோ 50, கோ 57, கோ 47, ஏடிடி 36, ஏடிடி 37, திருச்சி 1, ஏடிடி 46 போன்ற இரகங்களும், பச்சைப்பயறில் கோ 6, கோ 7 மற்றும் வம்பன் 2 போன்ற இரகங்களும், உளுந்தில்




கோ 5, வம்பன் 8, ஏடிடி 3, டிஎம்வி 1 போன்ற இரகங்களும் அதிகளவு துத்தநாகம் மற்றும் இரும்புச் சத்துக்களை உட்கொள்ளும் திறன் கொண்டவையாகக் கண்டறியப் பட்டுள்ளன.

● எனவே இந்த இரகங்களை வேளாண் ஊட்டச்சத்து செறிவூட்டலுக்குப் பயன்படுத்தலாம்.

● நெல்லில் கோ 51, கோ 47, ஆடுதுறை 47 மற்றும் ஆடுதுறை 37 இரகங்களைக் கொண்டு துத்தநாக செறி வூட்டலுக்காக அடியுரமாக 50 கிலோ துத்தநாக சல்பேட்டுடன், பூக்கும், பால் பிடிக்கும் மற்றும் பால் முற்றி தானியம் ஆகும் பருவங்களில் 0.50 சத துத்தநாக சல்பேட் கரைசலைத் தெளிக்கும் போது விளைச்சல் 18.8 சதவிகிதம் அதிகரிப்பதோடு தானியங்களில் துத்தநாக சத்தின் அளவும் அதிகரிக்கின்றது என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கூறியுள்ளார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தரமற்ற ரூ.140 இலட்சம் மதிப்பிலான 211 மெ.டன் அளவிலான 111 விதைக்குவியல்களுக்கு விற்பனை தடை

ஈரோடு, மார்ச் 1

ஈரோடு தலைமை இடமாகக் கொண்டு தமிழ்நாடு அரசு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றிப்புத் துறையின் ஓர் அங்கமாக விதை ஆய்வு துணைஇயக்குநர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது.




ஈரோடு மாவட்டம் முழுவதும், திருப்பூர் மாவட்டத்தின் ஒரு பகுதியும் ஆளுகை எல்லைகளாக கொண்டு செயல்படும் இத்துறையின் கீழ் மொத்தம் 740 விதை விற்பனை நிலையங்கள் உள்ளது. இதில் 73 அரசு துறையையும், 30 பகுதி அரசு துறையையும், மீதம் 637தனியார் விதை விற்பனை நிலையங்கள் ஆகும். இவற்றுள் 86 எண்கள் காய்கறி, தென்னை மற்றும் பழ மர நாற்றுகள் விற்பனை நிலையங்கள் ஆகும். விதை சட்டம் 1966 இன் படி விதை என்பது அடுத்த தாவர தலைமுறையை உருவாக்கக்கூடிய வித்தாகும். இவை மனிதர்களும் கால்நடைகளும் உண்ணக்கூடிய அனைத்து வகையான தாவரங்களின் பிறப்பாக்க மூலங்களான விதைகள், வெட்டுத்துண்டுகள், கிழங்குகள் முதலியன ஆகும். இவை அனைத்து தாவர மூலங்களும் உற்பத்தி செய்யவும், விற்பனை செய்யவும், விதை உரிமம் பெறுவது கட்டாயமாகும். விதை உரிமம் பெறாமல் விதை உற்பத்தி, விநியோகம், விற்பனை செய்வது சட்டப்படி குற்றமாகும். மேலும், விதை உரிமம் பெற்றவர்கள் இச்சட்டத்தின் கீழ் எந்த ஒரு விதிமீறல் இல்லாமல் விற்பனை செய்வது அவசியமாகும்.

ஈரோடு, விதை ஆய்வு துணை இயக்குநர் பெ.சுமதி தலைமையின் கீழ் ஈரோடு, கோபி, பவானி, சத்தியமங்கலம் மற்றும் காங்கேயம், தாராபுரம் விதை ஆய்வாளர்கள் அடங்கிய குழு விதை ஆய்வு துணை இயக்குநர் ஈரோடு ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் அவ்வப்போது திடீர் குழு ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

அப்போது விதிமீறல் காணப்பட்ட நெல், மக்காச்சோளம், வீரிய ரக காய்கறி விதை குவியல்கள் தரமற்ற ரூ.140 இலட்சம் மதிப்பிலான 211 மெ.டன் அளவிலான 111 விதைக்குவியல் களுக்கு விற்பனை தடை விதிக்கப்பட்டு, விதை விற்பனை யாளர்கள் மீது உரிய துறை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை 3203 விதை மாதிரிகள் முளைப்புத்திறன் ஆய்வு பரிசோதனைக்காகவும், 310 இனத்தூய்மை பரிசோதனைக்கும் 109 பருத்தி விதைகள் பிடி பரிசோதனைக்காகவும் எடுக்கப்பட்டு ஆய்வறிக்கை பெற்றதில் சுமார் 53 விதை மாதிரிகள் முளைப்புத்திறனில் தேர்ச்சி பெறாததால் 45 விதை விற்பனையாளர்கள் மீது துறை நடவடிக்கை எடுக்கப்பட்டும் 8 விதை விற்பனையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு விதை சட்டம் 1966-பகுதி 19(a) மற்றும் பகுதி 7 (b) ன் கீழ் குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து விதை ஆய்வுத் துணை இயக்குநர் கூறுகையில் விதை விநியோகஸ்தர்கள் விதை உரிமம் பெற்ற விதை விற்பனையாளர்கள் மட்டுமே விதை விநியோகம் செய்ய வேண்டும். மேலும், விதை இரகங்கள் பதிவு சான்று பெறப்பட்டுள்ளதா அல்லது பதிவு சான்று காலாவதி ஆகாமல் உள்ளதா என்பதை உறுதி செய்த பின்னரே விதை விநியோகம் செய்ய வேண்டும். ஒவ்வொரு விதை குவியல்களுக்கும் முளைப்புதிறன் அறிக்கை பெற்றிருக்க வேண்டும் என்றும் கூறினார். விவசாயிகள் விதைகள் வாங்கும் போது கையொப்பமிட்டு விதை விற்பனை இரசீது பெற்ற பின்னரே விதைகளை வாங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.



# நாமக்கல் மாவட்ட விவசாயிகளுக்கு இயந்திரமயமாக்கல் பயிற்சி



நாமக்கல், மார்ச் 1

நாமக்கல் மாவட்டம், வசந்தபுரத்தில் உள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் செவ்வாய்கிழமையன்று உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி புதிய வேளாண் கருவிகளை கொண்டு இயந்திரமயமாக்கல் மற்றும் பிரபலப் படுத்துதல் முகாம் நடத்தப்பட்டது. முகாமில் பிஜிபி வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகளும் கலந்து கொண்டனர். விவசாய உதவி இயக்குனர் சித்ரா, உதவி விவசாய அதிகாரி காஞ்சனா, தொகுதி தொழில்நுட்ப மேலாளர் ரமேஷ் ஆகியோர் முகாமினை தலைமை தாங்கினார்கள்.

ரமேஷ் முகாமில் வாழ்த்துரை வழங்கி, இயந்திரமய மாக்குதலின் முக்கியத்துவம், பயன்கள் பற்றியும் எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் கே.எல் எண்டர்பிரைசஸ் நிறுவனம் கலந்து கொண்டு தங்களுடைய கருவிகளை காட்சிபடுத்தினர். பவர் வீடர், தீவனபப்பயிர் வெட்டும் இயந்திரம், முகடு அமைக்கும் கருவி, ப்ரஷ் கட்டர் ஆகிய கருவிகள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்துதது. பவர் வீடரின் விலை ரூ.1,02,000, பெரு விவசாயிகளுக்கு 60%, குறு விவசாயிகளுக்கு 50% மானியமும் வழங்கப்படுகிறது. இந்தக் கருவியில் அதிர்வுகள் இல்லை, உதிரி பாகங்களும் கிடைக்கும் எனவும், முன்பதிவுகள் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என கூறினார். ப்ரஷ் கட்டர் விலை ரூ.21,000 எனவும் மானியத்தில் ரூ.10,000 ஆக வாங்கிக் கொள்ளலாம். அக்ரிஸ்டாக் மொபைல் செயலியை பற்றியும், இரவில் நீர் பாசனம் செய்யும் விவசாயிகள் வீட்டிலிருந்தே பாசனம் செய்ய ஏதுவாக அம்சங்களை செய்துள்ளனர். இந்த செயலிக்கும் ரூ.7,000 வரை மானியம் உள்ளதாக முகாமில் கூறினார்கள்.



100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# அறிவியல் வழிமுறை என்றால் என்ன? இது வேளாண்மையில் எப்படி உள்ளது?

எந்த ஒரு இயற்கை நிகழ்வையும் இது ஏன் ஏற்படுகிறது என்று கேள்வி கேட்டு ஆராய்ந்து பரிசோதனை செய்து பலமுறையும் சரி பார்த்து, துல்லியமாக இதனால் தான் ஏற்படுகிறது என்கிற முடிவை எட்டுவது தான் அறிவியல் முறை. அதாவது பிப்ரவரி 28ஆம் தேதி 'உலக அறிவியல் தினமாக' நாடெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. நம்முடைய நாட்டு விஞ்ஞானியான சர் சி.வி.ராமன் விளைவை "RAMANS EFFECTS" உலகிற்கு அறிவித்த நாளை தான் (பிப்.28) உலக அறிவியல் நாளாக கடைபிடிக்கப்படுகிறது.

அறிவியல் என்பது நிலையானது அல்ல, மாற்றதக்கது.

**வேளாண்மையில் அறிவியல் முறை**

தொன்று தொட்டு நடைபெற்று வரும் வேளாண்மையில் காலத்திற்கேற்றவாறு மாறுதல் நடைபெற்று வருவதை நாம் கண் கூடாக பார்க்கிறோம். மாடுகட்டி போராடித்த காலம் போய் இன்று இயந்திரங்களை வைத்து கதிர் அறுவடை செய்கிறோம். விதைப்பிலும் மாற்றங்கள் நிறைய உள்ளன. 20 கிலோ நெல் விதை ஏக்கருக்கு விதைத்த காலம் போய் இன்று டிரம் சீடர் மூலம் ஒரு கிலோ நெல் விதைக்கும் காலமாக மாறிவிட்டது. இந்த மாற்றங்கள் எதனால் ஏற்பட்டது என்றால் அறிவியல் வழிமுறைகள் தான் காரணமாகும்.

மூட்டை மூட்டையாக உரம் போட்ட காலம் போய் அறிவியல் வழிமுறையின் காரணமாக இன்று நானோ யூரியா, நானோ டி.ஏ.பி. ஒரு லிட்டர்/கிலோ பயன்படுத்தினாலே போதுமானது. வீட்டிலே இருந்து கைபேசி வாயிலாக வயலில் உள்ள கிணற்று நீரை இறைக்க/நிறுத்த (SWICH / OPP) செய்ய முடியும். இது போன்ற எண்ணற்ற பயன்கள் வேளாண்மையில் நிகழ்ந்து வருகின்றன.

அறிவியல் வழி முறை என்றால் கேள்வி கேட்பது, பரிசோதனை செய்வது, பரிசோதனையின் மூலம் தீர்வு காண, சரிபார்ப்பது, தரவுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து ஒரு முடிவுக்கு வருவது என்பது உங்களுக்கும் தெரிந்திருக்கும் தானே.

அறிவியல் வளர்ச்சி நாளுக்கு நாள் வேளாண்மையில் அதிகரித்து வருகிறது. நானோ தொழில்நுட்பம் தொடங்கி இன்று AI (ARTIFICIAL INTELLIGENCE) வரை வேளாண்மையில், புகுத்தப்பட்டு வருகிறது.

அந்த காலத்திலே மகாகவி பாரதி கூட தன்னுடைய கவிதையில் கூட, கங்கை நதி புறத்து கோதுமை பண்டம், காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்.

சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம். சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்.

வங்கத்தில் ஓடி வரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம் என்ற பாரதியின் அறிவியல் தொலை நோக்கு என்னவென்று சொல்லுவது !

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**






பார்த்திபனூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு கமுதி நம்மாழ்வார் விவசாய கல்லூரி நான்காம் ஆண்டு மாணவர்கள், அரசு பள்ளி மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகள் வைத்து, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினர். பள்ளி மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# காகித அடிப்படையிலான பொருட்கள் உற்பத்தி குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி

கோயம்புத்தூர், மார்ச் 1

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காகித அடிப்படையிலான பொருட்கள் உற்பத்தி குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 15.3.25 காகித அடிப்படையிலான பொருட்கள் உற்பத்தி குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடைபெற உள்ளது. வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூரில் உணவுபதன்செய் பொறியியல் துறையின் கீழ் செயல்படும் மாதிரி காகித ஆலை, விவசாய கழிவுகள் மற்றும் கழிவு காகிதங்களைப் பயன்படுத்தி காகித அடிப்படையிலான பொருட்களை தயாரிப்பதற்காக 1976 ஆம் ஆண்டு நிறுவப்




பட்டது. இயந்திரங்கள், அதாவது காகித துண்டாக்கி இயந்திரம், காகித கூழ் தயாரிக்கும் இயந்திரம், அட்டை தயாரிக்கும் இயந்திரம், அட்டை நேர்த்தி இயந்திரம், உலர்த்தி, அச்சு இயந்திரம் போன்றவை, கழிவுப் பொருட்களில் இருந்து காகித அடிப்படையிலான பொருட்களை தயாரிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளன.

பயிற்சியில் பின்வரும் தயாரிப்புகள் கற்றுக் கொடுக்கப்பட உள்ளன :

- அலுவலக கோப்புகள்
- ஸ்பிரிங் கோப்புகள்
- நாடா கோப்புகள்

**பயிற்சி நடைபெறுமிடம் :** மாதிரி காகித ஆலை, உணவு பதன்செய் பொறியியல் துறை, வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (**பேருந்து நிறுத்தம் :** தாவரவியல் பூங்கா) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம் புத்தூர்- 641 003.

**பயிற்சி கட்டணம் :** ஆர்வமுள்ள நபர்கள் பயிற்சிக் கட்டணமாக ரூ.1000/- (ரூபாய் ஆயிரம், 18% ஜிஎஸ்டியை உள்ளடக்கியது) பயிற்சி தொடங்கும் நாளில் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு, பேராசிரியர் மற்றும் தலைவர், உணவு பதன்செய் பொறியியல் துறை, வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. மின்னஞ்சல் : processing@tnau.ac.in, தொலைபேசி : 86680 41185.

## தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் உழவர் வயல் வெளி பள்ளி நடைபெற்றது



திருச்சி, மார்ச் 1

திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டாரம், மணக்கால் கிழக்கு கொப்பாவளி கிராமத்தில் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப் படுத்தும் திட்டத்தின் கீழ் உழவர் வயல் வெளி பள்ளி நடைபெற்றது. பயறுவகை சான்று பெற்ற விதைத்தேர்வு, உயிர் உரங்கள் கொண்டு விதை நேர்த்தி செய்தல், உளுந்து சாகுபடி நவீன தொழில்நுட்பங்கள், இலை வழி டிஏபி கரைசல் 2% தெளித்தல் பற்றி லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சி.சத்தியப்பிரியா விரிவாக விளக்கி விவசாயிகளுக்கு கூறினார். மேலும் பண்ணை பள்ளியில் கலந்து கொண்ட விவசாயிகள் அனைவருக்கும் உன்னத உளுந்து சாகுபடி துண்டு பிரசுரம், சாகுபடி குறிப்பேடு தொழில்நுட்பங்கள் அடங்கிய வண்ண புத்தக கையேடு வழங்கினார்.

வேளாண்மை அலுவலர் கௌசல்யா பேசுகையில், வேளாண்மைத் துறையில் திரவ உயிர் உரங்கள் 50 சதவீதம் மானிய விலையில் பெற்று பயன்படுத்துதல், வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள், விவசாயிகள் கவுரவ நிதி திட்டம், மண் மாதிரி சேகரிப்பு அவசியம் மற்றும் மண் மாதிரி அடிப்படையில் உர நிர்வாகம் அளித்தல், மண் வள அட்டை பயன்படுத்துதல் பற்றி விரிவாக விளக்கி கூறினார்.

பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றி விரிவாக விளக்கி கூறினார். சந்திரசேகர், உதவி வேளாண்மை அலுவலர் பேசுகையில் பயறுவகை பயிர்களுக்கு, நுண்ணூட்டம் பயன்படுத்துதல், மண் மாதிரியின் அடிப்படையில் உரம் மேலாண்மை செய்தல், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானிய திட்டங்கள், நெல்லுக்கு பின் உளுந்து, வரப்பு பயிரில் உளுந்து விதைத்தல், ஜிப்சம், ஜிங் சல்பேட், நெல் நுண்ணூட்டம் பயன்படுத்துதல் மானிய திட்ட விபரங்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் நன்மை செய்யும் பூச்சிகள், தீமை செய்யும் பூச்சிகள் பற்றியும், அட்மா திட்ட செயல்பாடுகள், கண்டுணர்வு சுற்றுலா, விவசாயிகள் பயிற்சி செயல் விளக்கத் திட்டங்கள், விவசாயிகள் கௌரவ நிதி பெற தனது சுய விவரங்களை பதிவு செய்வது பற்றி விளக்கி கூறினார். மேலும் உழவர் வயல்வெளி பள்ளியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் ஒருங்கிணைந்த பயிர் பயிர் பாதுகாப்பு, பூச்சி நோய் விழிப் புணர்வு வழிகாட்டி வழங்கப்பட்டது. இப்பண்ணை பள்ளியில் கொப்பாவளி கிராமத்தை சேர்ந்த பல முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.



# பாலாறு வேளாண்மை கல்லூரி மாணவர்கள் ஊரக வேளாண் அனுபவப் பணி துவக்க விழா



கிருஷ்ணகிரி, மார்ச் 1

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்ப்பு கூட்டத்தில் பாலாறு வேளாண்மை கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு தங்களது ஊரக வேளாண் அனுபவப் பணி திட்டத் தொடக்க விழாவை இதனுடன் இணைந்து தொடங்கினர். இவ்விழாவில் மாணவர்கள் கிருஷ்ணகிரி வேளாண் அதிகாரிகளின் உதவியுடன் விவசாயம் சார்ந்த கண்காட்சியினை அமைத்தனர். அதில் பல்வேறு பயிர்களில் வரும் பூச்சி தாக்குதல் மற்றும் நோய் தாக்குதலை பற்றி மாவட்ட ஆட்சியர் C.தினேஷ்குமார் மற்றும் வேளாண்மை இணை இயக்குநர் C.பச்சையப்பன் மற்றும் விவசாயிகள் குறை தீர்ப்பு கூட்டத்திற்கு வருகை தந்த விவசாயிகளிடம் இதனைப் பற்றி மாணவர்கள் மற்றும் உதவி பேராசிரியர் முனைவர் A.வெண்ணிலா மேரி விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும் கண்காட்சியில் பயிர்களின் ஊட்டச்சத்து குறைபாடு அதன் மேலாண்மை மானிய விலையில் கிடைக்க பெறும் நுண்ணூட்டக் கலவைகள் மற்றும் உயிர் உரங்களை பற்றி மாணவர்கள் விவசாயிகளிடம் கூறினர். மேலும் சிறப்பு அம்சமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இயற்கை வேளாண் மையை மேம்படுத்தும் வகையில் பஞ்சகாவியா ஜீவாமிர்தம் மீன் அமிலம் செய்முறை பற்றியும் அதன் முக்கியத்துவம் மேலும் அதனால் கிடைக்க பெறும் பயன்களை பற்றி மாணவர்கள் விரிவான முறையில் விவசாயிகளிடம் விளக்கினர்.

## பஞ்சகவ்யா செய்முறை

பஞ்ச கவ்யா பசுவிலிருந்து 5 முக்கிய கூறுகளை உள்ள டக்கியது, அவை, 5 கிலோ பசுவின் சாணம், 4 லிட்டர் மாட்டு சிறுநீர், 3 லிட்டர் பால், 2 லிட்டர் தயிர் மற்றும் 1/2 லிட்டர் நெய்.

உங்கள் ஒவ்வொரு விரலிலும் சூத்திரத்தைப் பயன்படுத்தவும், இதன் மூலம் நீங்கள் எளிதாக நினைவில் கொள்ளலாம். மற்ற அனைத்து பொருட்களும் சேர்க்கப்பட்டு, பஞ்சகவ்யாவின் விளைவை வலுப்படுத்த மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

இளநீர் 3 லிட்டர், வெல்லம் 500 கிராம், நன்கு பழுத்த வாழைப்பழம் 12 எண்கள் சேர்த்து பஞ்சகவ்யாவின் செயல் திறனை மேம்படுத்தலாம்.

1. பசுஞ்சாணி 5 கிலோ பசுமாட்டு நெய் 500 மிலி கலந்து பிசைந்து ஒரு பிளாஸ்டிக் வாளியில் 3 நாட்கள் வைக்கவும்.

2. நான்காவது நாள் இதனுடன் மற்ற பொருட்கள் கலந்து மண் பானை (அ) பிளாஸ்டிக் (அ) சிமெண்ட் தொட்டியில் கையால் கரைத்து கம்பிவலை (அ) துணியால் மூடி வைக்கவும்.

3. தினமும் இருவேளை கலந்து காற்றோட்டம் ஏற்படுத்தி.

4. பதினைந்தாவது நாள் நுண்ணுயிர் பெருகி 10 லிட்டர் தண்ணீருக்கு 300 மில்லி லிட்டர் என்ற அளவில் கலந்து கைதெளிப்பானால் காலை (அ) மாலை வேளையில் தெளிக்கலாம்.

நிலவள ஊக்கி : ஏக்கருக்கு 20 லிட்டர் பஞ்சகாவ்யா கரைசல் பாசன நீர் (அ) சொட்டு நீருடன் கலந்து பாய்ச்சலாம்.

# வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் விவசாயிகளுக்கு கண்டுணர்வு சுற்றுலா

கிருஷ்ணகிரி, மார்ச் 1

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் வேளாண்மைத்துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் (அட்மா) கீழ் வேப்பனப்பள்ளி வட்டார பகுதி விவசாயிகளுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் சிவநதி தலைமையில் இயற்கை விவசாயம் என்ற தலைப்பில் அரவிந்த் பையோ புராடக்ட், பையனப்பள்ளி இடத்திற்கு உள் மாவட்ட விவசாயிகள் கண்டுணர்வு சுற்றுலாவிற்கு 50 விவசாயிகளை அழைத்து செல்லப்பட்டது.

இப்பயிற்சியில் வேளாண்மை துணை இயக்குநர் கிருஷ்ணகிரி (ஓய்வு) மனோகரன் பங்கேற்று இயற்கை முறையில் மல்பெரி



சாகுபடி முறை தொழில்நுட்பம், கோடை உழவின் பயன்கள், விதை நேர்த்தி பயன்கள், அசோலா பயன்கள், மண்புழு உரம் தயாரித்தல், பூச்சி விரட்டி, மீன் அமிலம், ஜீவாமிர்தம், அமிர்த கரைசல், கன ஜீவாமிர்தம், பசுந்தாள் உரம் தயாரித்தல், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள், ராகி வரிசை நடவு முறைபற்றி எடுத்து கூறினார். பஞ்சகாவ்யா தயாரித்தல் குறித்து தெளிவாக செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

உயிர் உர விதை நேர்த்தி செய்தல், தரமான வீரிய ரகங்களை தேர்வு செய்ய வேண்டும், விதைகளை உயிர் பூஞ்சானகொல்லி




சூடோமோனாஸ், உயிர் உரங்கள் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா அல்லது 100 மிலி திரவ உயிர் உரங்கள் தேவையான விதையுடன் ஆற வைத்த அரிசி கஞ்சி சேர்த்து நன்கு கலந்து விதை நேர்த்தி செய்யவும் அறிவுறுத்தப்பட்டது.

கலந்து கொண்ட விவசாயிகளுக்கு அக்ரிஸ்டாக் விவசாயி களுக்கான தனித்துவமான அடையாள எண் மூலம் கிடைக்கப் பெறும் நன்மைகள் பற்றி தெளிவாக கூறப்பட்டது. இந்த பயிற்சியில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். கலந்துக் கொண்ட விவசாயிகளுக்கு துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது. அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் கவிதா அட்மா திட்ட செயல்பாடுகள் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பாரதிராஜா உழவன் செயலியை பயன்படுத்தும் முறைகள் பற்றி விளக்கமளித்தார்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் “வேளாண்மைக் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் தர உறுதி”குறித்த பயிற்சி

கோயம்புத்தூர், மார்ச் 1

“வேளாண்மைக் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் தர உறுதி”குறித்த மூன்று நாள் பயிற்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்குநரகத்தால் கடந்த 26.2.25 முதல் 28.2.25 வரை பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தப்பட்டது.




தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் இர.தமிழ்வேந்தன், இப்பயிற்சியைத் துவக்கி வைத்து பேசுகையில், ஒரு வேளாண் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு, வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் திறமையான வல்லுநர்களின் பங்களிப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது என்று கூறினார். மேலும் அவர் கூறுகையில், பாடத்திட்டம் உருவாக்கல், கற்பித்தல் முறை மற்றும் ஆராய்ச்சி முறைகளில் தொடர்ந்து தர நிலையைத் உறுதிப்படுத்த புதிய தொழில்நுட்பங்கள் உள்ளடக்கிய இது போன்ற பயிற்சிகள் பேராசிரியர்களுக்கு வழங்குவது இன்றியமையாததாகிறது என்றார்.

திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்குநர் முனைவர் பி.ஜெயகுமார், இப்பயிற்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத் ததுடன், இது போன்ற பயிற்சிகள் பேராசிரியர்களுக்கு அளிப்பதன் மூலம் வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சிகளில் உயர் தரத்தை எட்ட முடியும் என்றார். முனைவர் எஸ்.செந்தில் விநாயகம், தலைமை நிர்வாக அதிகாரி (a-IDEA) மற்றும் தலைவர், கல்வி முறை மேலாண்மை, இந்திய வேளாண் ஆராய்ச்சி

மேலாண்மை கல்விக்கூடம் (NAARM) உழவர்களின் கள பிரச்சனைகளுக்குப் பயனளிக்கும் புதிய தொழில் நுட்பங்களை உருவாக்குவதற்குச் சிறந்த திறன்களை வளர்த்துக் கொள்ள வலியுறுத்தினார். வேளாண் நானோ தொழில்நுட்ப மைய பேராசிரிர் மற்றும் தலைவர் முனைவர் வி.கோமதி, வேளாண் தொழில் நுட்பங்களைச் சமீபத்திய முன்னேற்றமான தகவல் தொடர்பு தொழில் நுட்பங்களை இணைத்து வேளாண் மக்களின் தொழில்நுட்பத் தேவையைப் பூர்த்திச் செய்ய ஏதுவாக இப்பயிற்சிப் பாடங்கள் உருவாக்கப்பட்டதுடன், வேளாண் வல்லுநர்களின் ஆரோக்கியத்தையும் கருத்தில் கொண்டு, மன அழுத்த மேலாண்மையும் சேர்த்திருப்பது வரவேற்கத்தக்கது என்றார்.

பேராசிரியர் மா.இரா.சீனிவாசன் (வேளாண் பூச்சியியல்) வரவேற்புரையும், பேராசிரியர் த.சம்சாய் (வேளாண் ஊரக




மேலாண்மை) நன்றியுரையும் வழங்கினர். பல்கலைக்கழக வல்லுநர்கள் மற்றும் பிற அரசு மற்றும் தனியார் நிறுவன வல்லுநர்களின் உதவியோடு, வேளாண் கல்வி மற்றும் வடிவமைப்பு குறித்தச் சிந்தனைகள், தர உறுதிப்பாட்டிற்கான அங்கீகாரம் மற்றும் தர வரிசை, கல்வி தணிக்கை, மதிப்பீடு, தர உறுதிப்பாட்டிற்கான அங்கீகாரம் மற்றும் தர வரிசை, நிதி மேலாண்மை, இலக்க முறை (எண்ணிமம்) கற்பித்தல் தொழில் நுட்பங்கள், நிதி நிலைத் தணிக்கை, திறந்தவெளி மூலக் கருவிகள் மற்றும் இணைய வளங்கள், வளர்ந்து வரும் வேளாண்மைச் சுற்றுச்சூழல் அமைப்பு சார்ந்த தர ஆராய்ச்சி, தரமான உயர் கல்விக்கான கலப்பு முறை கற்றல் நுட்பங்கள், இணைய (cyber) பாதுகாப்பு, வேளாண் ஆராய்ச்சிகளை மேம் படுத்துதல், தரவு பகுப்பாய்வு, தரவை விளக்குதல் மற்றும் குறிப்பு மேலாண்மை போன்ற சமீபத்திய தொழில்நுட்பங்கள் மட்டுமின்றி மன அழுத்த மேலாண்மைக் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியின் நிறைவு விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிர் தொழில்நுட்ப மகத்துவ மையத்தின் திட்ட இயக்குநர், முனைவர் எஸ்.மோகன்குமார், இப்பயிற்சியில் பங்கேற்றவர்களைப் பாராட்டி வாழ்த்தினார்.

மேலும், இவர் கூறுகையில் மாணவர்களின் கற்பித்தலை மேம்படுத்துவதற்கும், கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும், உயர்கல்வியில் தர நிர்ணயம் முக்கியமானதாகும் என்றார். கல்வி மற்றும் நிறுவனத்தின் தரத்தை உறுதிபடுத்துவதற்கு இதுபோன்ற புத்தாக்கப் பயிற்சிகள் முக்கியமானதாகக் கருதப் படுகிறது என்றார். மேலும், தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டு, கல்வி மற்றும் ஆராய்ச்சியில் புதிய முன்னேற்றங் களை ஏற்க ஊக்குவித்தார்.

திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்குநர் முனைவர் பி.ஜெயகுமார் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் தேர்வு கட்டுப்பாட்டாளர் முனைவர் வி.பாலசுப்ரமணி, ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்று தங்களது வாழ்த்துரை யினை வழங்கினர். இதுவரை 16 தொடர் பயிற்சிகள் பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரி முதல்வர்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் நேபாளத்தில் உள்ள திரிபுவன் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் களுக்கு வழங்கப்பட்டுள்ளது. உதவி பேராசிரியர் இரா.சசிகலா (இதழியல்) வரவேற்புரையாற்றினார். இணை பேராசிரியர் முனைவர் க. கணேசன் (வேளாண் பூச்சியியல்) தனது நன்றி உரையினை வழங்கினார்.

# உயிர் உரங்கள் - ஓர் பார்வை (Bio-fertilizers)

உயிர்ப்புள்ள நிலையில் உள்ள நுண்ணுயிரிகளைக் கொண்ட தயாரிப்புக் கலவைக்கு உயிர் உரம் என்று பெயர். மண் அல்லது விதை நேர்த்தி செய்யும்போது, பயிர்களின் வேர் மண்டலத்தில் இருந்து தாவரங்கள் ஊட்டச்சத்துகளை எடுத்துக்கொள்ள இவை துணை புரிகின்றன. மேலும் சில நுண்ணுயிரிகள் வளி மண்டலத்திலுள்ள தழைச்சத்தை மண்ணில் நிலை நிறுத்தும் பண்புகளைக் கொண்டுள்ளன.

## உயிர் உரங்களின் வகைகள்

● தழைச்சத்தை அளிக்கும் பாக்டீரியா (ரைசோபியம், அசட்டோபாக்டர, அசோஸ்பைரில்லம், சயனோபாக்டீரியா).

● மணிச்சத்தைக் கரைக்கும் நுண்ணுயிரி (பேசில்லஸ், அஸ்பர்ஜில்லஸ்)

● சாம்பல்சத்தை விடுவிக்கும் நுண்ணுயிரிகள் (ஃபிரட்டுரியா, பேசில்லஸ்)

● வேர் உட்பூசணம் (குளோமஸ்,அக்குலோஸ்போரா)

● வேர்சூழ் நுண்ணுயிரி (லாக்கேரியா)

● பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வேர் நுண்ணுயிரி (அசட்டோபாக்டர், ரைசோபியம், பேசில்லஸ் சப்டிலிஸ்)

● மணிச்சத்தை இடம் பெயரச் செய்யும் உயிர்உரங்கள் (குளோமஸ்வகை, கிகாஸ்போராவகை)

● நுண்ணூட்டச் சத்துக்கான உயிர் உரங்கள் (பேசில்லஸ் வகை)

● இதர உயிர் உரங்கள் (சைனோபாக்டீரியா, அசோலா)




## உயிர் உரங்களின் நிலைகள் நுண்ணுயிர்

உரங்கள் திட மற்றும் திரவ நிலையில் தயாரிக்கப்படுகின்றன. கரி கலக்கப்பட்ட திட நுண்ணுயிர் உரங்களை ஆறு மாதங்கள் வரை பயன்படுத்தலாம்.

## நீர்ம உயிர் உரங்கள்

ரைசோபியம், அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, அசட்டோ பாக்டர், போன்றவை நீர்ம உரங்களாகவும் தயாரிக்கப் படுகின்றன. சொட்டு நீர் பாசனத்தில் நீர்ம உரங்களைச் சேர்த்து செலுத்த முடியும்.

இவை பயிர் வளர்ச்சியையும், விளைச்சலையும் அதிகப் படுத்துகின்றன, மண்ணின் வளத்தைக் காக்கின்றன. இவற்றில் நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. நீர்ம உயிர் உரங்களின் உற்பத்தி செலவு குறைவு. விவசாயிகளால் எளிதாகப் பயன்படுத்தப்படுகிறது. திரவ உயிர் உரங்களின் இருப்புக் காலம் 12 –14 மாதங்கள் ஆகும்.

**உயிர் உரங்களைப் பயன்படுத்தும்போது கவனிக்க வேண்டியவை**

- குளிர்ந்த, வறண்ட சூழ்நிலையில் சேமிக்க வேண்டும்.
- பயிர்களுக்கு ஏற்ற உயிர் உரங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- உயிர் உரங்களை அதன் உறையின் மேல் உள்ள விவரங்களைப் பார்த்து வாங்கவேண்டும்.
- காலாவதி காலத்திற்குள் பயன்படுத்த வேண்டும்.
- உயிர் உரங்களைச் சேர்த்து பயன்படுத்தும் போது சரியான சேர்க்கையை உறுதி செய்து கொள்ளவேண்டும்.
- உயிர் உரங்களில் நுண்ணுயிர்கள் வாழ்வதால், சேமிப்பின் போது அதிக கவனம் தேவை.
- தழைச்சத்து மற்றும் மணிச்சத்து உயிர்உரங்களைச் சேர்த்து பயன்படுத்துவதால்நல்ல பலன் பெறலாம்.
- உயிர் உரங்களைஇதர வேதிப் பொருட்களோடு கலக்கக் கூடாது.

வேளாண்மையில் உரம் என்பது முக்கியமான இடு பொருளாகும். எனவே மண் வளத்தைக் காக்கவும், அதிக விளைச்சலைப் பெறவும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாக மு றைகளைப் பின்பற்ற வேண்டும்.

மேற்கண்ட தகவலை **ப.நந்தகுமார், உதவிப் பேராசிரியர் (மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல்), நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி** தெரிவித்தார்.

# தலைக் கவசம் உயிர்க் கவசம்


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.